Publication - Dinamani

Date 02/12/2013
Page No 02

2 தினமணி தருமபுரி பெங்களூரு ஞாயிற்றுக்கிழமை, 1 டிசம்பர், 2013

# குடிபோதைக்கு அடிமையாவது 'மனித மூளையின் தோல்வி'

## ஆளுநர் எச்.ஆர்.பரத்வாஜ்

பெங்களூரு, நவ.30: குடிபோதைக்கு அடிமையாவது மனித மூளையின் தோல்வி என்று கர்நாடக ஆளுநர் எச்.ஆர்.பரத்வாஜ் தெரிவித்தார்.

பெங்களூருவில் சனிக்கிழமை கடபம் நிறுவனத்தின் அனாநிதா மது போதைப் பொருள் அடிமைப்பட்டோர் மறுவாழ்வு மையத்தை தமிழக ஆளுநர் ரோசய்யாவுடன் இணைந்து திறந்துவைத்து வைத்து அவர் பேசியது:

குடி குடியைக் கெடுக்கும் என்று எழுதப்பட்டிருந்தாலும், குடிக்கு சிலர் அடிமையாகிவிடுகிறார்கள்.

குடிப்பழக்கம் வீட்டை மட்டுமல்ல, நாட்டையும் சீரழிக்கும். மது,போதைப்பொருள் போன்றவற்றால் சட்டம் ஒழுங்கு சீர்குலைகிறது.

எனவே, குடிப் பழக்கத்திற்கு அடிமையாகாமல் இருப்பது நல்லது. ஒருவேளை அடிமையடைந்து விட்டால், அதிலிருந்து விடுபட இதுபோன்ற மையங்கள் உதவுவது பாராட்டுக்குரியது.

மது, போதைப் பொருள் போன்ற எந்தவித தீய பழக்கங்களுக்கும் அடிமையாவது மனித மூளையின் தோல்வி ஆகும். அதிலிருந்து மருத்துவ ரீதியாக மனிதர்களை விடுவிக்க தொடர்ந்து முயற்சி தேவைப்படுகிறது என்றார் அவர்.

விழாவில் தமிழக ஆளுநர் ரோசய்யா, மாநில சுகாதாரத் துறை அமைச்சர் யு.டி.காதர், கடபம் குழுமத் தலைவர் ரமேஷ் கடபம் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.



மது, போதைப் பொருள் அடிமைப்பட்டோருக்கான மறுவாழ்வு மையத்தை தமிழக ஆளுநர் ரோசய்யாவுடன் சேர்ந்து தொடக்கிவைக்கிறார் கர்நாடக ஆளுநர் எச்.ஆர்.பரத்வாஜ். உடன் மாநில சுகாதார துறை அமைச்சர் யு.டி.காதர் உள்ளிட்டோர்.